**நகர்மன்றம்,**
**போடிநாயக்கனூர் ,நாள்.29.07.2022**

2022ம் ஆண்டு ஜீலை மாதம் 29.07.2022ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திருமதி.ச.ராஜராஜேஸ்வரி,
நகர்மன்ற தலைவர்.

❖ **பொருள் எண்–1 :**

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜுன் 2022ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க.எண்.1103/2020/சி1)

**தீர்மான எண் : 88–** பதிவு செய்யப்பட்டது

❖ **பொருள் எண்–2:**

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுன் 2022ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க.எண்.1103/2020/சி1)

**தீர்மான எண் : 89–** பதிவு செய்யப்பட்டது

❖ **பொருள் எண்–3:**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவுகளில் சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த கீழ்க்கண்ட விவரப்படியுள்ள தள்ளுவண்டிகள், காம்பக்டர் பின்கள் மற்றும் டம்பர் பிளேசர் பின்கள் மிகவும் பழுதடைந்து அவற்றை மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே இவற்றை கழிவடை செய்து பொது ஏலத்தில் விட நகர்மன்றத்தின் ஒப்புதல் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. தள்ளுவண்டிகள் – 50 எண்ணிக்கை
2. காம்பாக்டர் பின் – 36 எண்ணிக்கை
3. டம்பர் பின் – 18 எண்ணிக்கை

**அலுவலகக்குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1501/2022/எச்1)

**தீர்மான எண் : 90–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

❖ **<u>பொருள் எண்–4:</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TN60-A-0522 வாகனத்தின் டயர்கள் மிகவும் பழுதடைந்து வாகனத்தை இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதால் பொது சுகாதார பணிகள் பாதிப்படைகிறது. எனவே பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளி கோரவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.22,000/–ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1332 /2022/எச்2)**

**தீர்மான எண் : 91–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்– 5:</u>**

இந்நகராட்சி பிறப்பு சன்றிதழில் குழந்தையின் பெயர் RHOHITH , தந்தையின் பெயர் SENTHILKUMAR, தாயின் பெயர் ANUSHADEVI என வழங்கியதை குழந்தையின் பெயர் RAMVAIBHAV தந்தையின் பெயர் S.S.KUMARAN , தாயின் பெயர் K.LAKSHMI என அரசு இதழில் மாற்றியுள்ளபடி பிறப்புச்சான்றிதழ் கோரி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில். வழக்கு தொடர்ந்துள்ளார் வழக்கு எண் WP (MD) No 9400 Of 2022–க்கு எதிர் வாதுரை திரு.ஹேமகார்த்திகேயன் வழக்கறிஞரால் அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு எதிர்மனுதாரர் கோரியபடி பிறப்புச்சான்றிதழ் வழங்குமாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வழக்கை நடத்தியதற்கான வழக்கு கட்டணம் ரூ.10,000/–ஐ பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1267/2022/எச்2)**

**தீர்மான எண் : 92–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–6:</u>**

அரசாணை(நிலை) எண்–79 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(எம்.ஏ2) துறை, நாள்.02.06.2022ன் படி, தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்கம் தொடர்பாக பிரதி மாதம் ஒவ்வொரு இரண்டாம் மற்றும் நான்காம் சனிக்கிழமைகளில் அரசின் பல்வேறு துறைகள், தன்னார்வலர்கள், தொண்டு நிறுவனங்கள்,கல்லூரி மாணவர்கள் மற்றும் பிற அமைப்பினர் உடன் சேர்ந்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.அதன் படி,பொதுமக்களுக்கு விழிப்புணர்வு வழங்கிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00/– இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1344 /2022/எச்1)**

**தீர்மான எண் : 93–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்– 7:</u>**

இந்நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகனம் TN60AS-2049 வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்து தகுதி சான்று பெற்று தரும் பணிக்கு 15.07.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பதபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகனம் TN60AS-2049 வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்து தகுதி சான்று (FC) எடுத்து வழங்கும் பணி | ரூ.1,15,000/– | ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல் கம்பம் | ரூ 1,14,950/– |
| | | | ஸ்ரீ சாய்ராம் ஏஜென்சிஸ் கம்பம் | ரூ.1,16,500/– |
| | | | லட்சுமி ஆட்டோ கேரஜ், கம்பம் | ரூ.1,17,650/– |

**அலுவலககுறிப்பு**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்,கம்பம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு வேலை உத்தரவு வழங்கவும், அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1284/2022/எச்1)
**தீர்மான எண் : 94–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–8:</u>**

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் போடிநாயக்கனூர் நகராட்சியினை திறந்த வெளி கழிப்பிடம் இல்லாத நகராட்சியாக (ODF+) அறிவிக்க திட்டமிடப்பட்டுள்ளது குறித்து ஆட்சேபணைகள் ஏதும் இருப்பின் 15 தினங்களுக்குள் தெரிவிக்க கோரிய அறிவிப்பினை மாலைமலர் தினசரி நாளிதழில் 27.02.2022ம் தேதி விளம்பரம் செய்தமைக்கு Malar Publication Pvt Ltd,Dindigul நிறுவனத்திற்கு ரூ.6,237/–னை விளம்பர கட்டணமாக வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 279 /2022/எச்1)
**தீர்மான எண் : 95–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–9:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொசுப்புழுக்களை கட்டுப்படுத்த பயன்படுத்தப்பட்டு வரும் டெமிபாஸ் மருந்து கையிருப்பு மிகவும் குறைவாக இருப்பதாலும், எதிர்வரும் மழைகாலங்களில் கொசுக்களின் உற்பத்தி அதிகமாக வாய்ப்புள்ளதால் டெங்கு மற்றும் சிக்கன்குனியா நோய்களை கட்டுப்படுத்திட பொதுசுகாதார அவசர அவசியம் கருதி 300 லிட்டர் டெமிபாஸ் மருந்து வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,00,000/– னை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 1906 /2022/எச்1)
**தீர்மான எண் : 96–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–10:</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான **11** எண்ணம் RICOH MP 2001L பிரிண்டர்களை ஆண்டு பராமரிப்பு முறையில் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொண்ட M/s.Stars Office Solution,Uthamapalayam என்ற நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் **19.07.2022** உடன் முடிவடைவதால், மேற்காண் நிறுவனத்தின் ஒப்பந்தகாலத்தினை மேலும் ஒரு வருட காலத்திற்கு**(20.07.2022** முதல் **19.07.2023** வரை) நீட்டிப்பு செய்யவும், பிரிண்டரின் பயன்பாட்டிற்கு தேவையான டோனர்கள் வழங்கவும், Consumable Parts மாதாந்திர பராமரிப்பு மேற்கொள்பவர்கள் மூலம் சரிசெய்யவும் மற்றும் ஒவ்வொரு மாதமும் நாம் பயன்படுத்தி எடுக்கும் பிரிண்டரின் எண்ணிக்கை தக்கவாறு பராமரிப்பு கட்டணம் செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.527/2020/இ1)**
**தீர்மான எண் :** 97– அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–11:</u>**

இந்நகராட்சியில் மைய கணினி இணைவழி மென்பொருள் (Urban Tree information System) சர்வரின் கீழ் இணைக்கப்பட்டு அலுவலக வரி வசூல் மையம் மற்றும் அனைத்து பிரிவு அலுவலர்களுக்கும் VPN மற்றும் LAN நெட்வொர்க் முறையில் கணினி இணைப்பு வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இவற்றின் பயன்பாட்டிற்கு பயன்படுத்திப்படும் கணினிகள் **15** எண்ணம் மற்றும் Dotmatrix Printer 4 எண்ணம் இவற்றை ஆண்டு பராமரிப்பின் (Without Material) கீழ் கொண்டு வரும்பொழுது உபகரணங்களில் ஏற்படும் பழுதுகள் மட்டும் சரிசெய்யப்படும், பழுது சரிசெய்ய முடியாத உபகரணங்களை புதிதாக மாற்றம் செய்யும் பொழுது அதற்கான தொகையினை மட்டும் அவ்வப்போது இந்நகராட்சி செலுத்தி பழுதுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பராமரிப்பின் கீழ் கொண்டு வரும்பொழுது, பழுது உபகரணங்களை உடனுக்குடன் மாற்றி அலுவலகப்பணி பாதிக்காதவண்ணம் மேற்கொள்ள இயலும்.

எனவே, கணினி உபகரணங்களை ஆண்டு பராமரிப்பு (AMC-Annual Maintanence Contract Without Material) முறையில் வருடாந்திர பராமரிப்பு பணியை மேற்கொள்ள மேலும் பராமரிப்பு காலமான **01.08.2022** முதல் **31.07.2023** வரை நீட்டிப்பு செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.**60,000/–**ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** **1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**மேலும் ஓராண்டு பராமரிப்பு பணியினை மெர்குரி சாப்ட்வேர், பெரியகுளம் என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.382/2020/இ1)**

**தீர்மான எண் : 98–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–12:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு செய்து விநியோகம் செய்யப்படும் குடிநீரில் கலப்பதற்கு தேவையான குளோரின் சிலிண்டர் ஓராண்டு உபயோகத்திற்கு வாங்குவதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.**3.00** லட்சத்தினை இந்நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2032/2021/இ1)

**தீர்மான எண் : 99–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–13:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சியில் **15**வது நிதிக்குழு மான்யம் (UnTied) 2020-21 ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவையான இலகு ரக வாகனம் (LCV) **16** எண்ணம் விநியோகம் செய்யும் பணிக்கான **12.07.2022**ம் தேதிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாலை மலர் தமிழ் நாளிதழ் மற்றும் Times of India ஆங்கில நாளிதழில் **26.06.2022**ம் தேதி மாநில அளவில் விளம்பரம் செய்தமைக்கு ,விளம்பர கட்டணமாக Accord Advertising Agencies,Chennai நிறுவனத்திற்கு ரூ.**43,260/–** வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். **1586 /2022/**இ1

**தீர்மான எண் :100–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–14:</u>**

தேனி மாவட்டத்தில் அரசு சார்பில் நடைபெறும் விழாவில் கலந்து கொண்டு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் முடிவுற்ற திட்டபணிகளை திறந்து வைக்க **30.04.2022**ம் தேதி வருகை புரிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து Evening Tamilnadu தினசரி நாளிதழில் **02.05.2022**ம் தேதி விளம்பரம் செய்தமைக்கு Evening Tamilnadu, Chennai-93 நிறுவனத்திற்கு ரூ.**14,700/–**னை விளம்பர கட்டணமாக வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1217 /2022/இ1)
**தீர்மான எண் :101–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–15:</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந,க.எண்–**27519–44/2021**/P2 , நாள் **28.06.2022**ன் படி , நமக்கு நாமே திட்டம் 2021 - 2022 கீழ் , கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு **15.07.2022**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எ ண். | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போடிநாயக்கனூர் நகராட்சி வார்டு எண்–18, தெற்குராஜ வீதி வடக்கு பக்கம் உள்ள பழுதடைந்த மழைநீர் வடிகால்களை அகற்றி புதிதாக மழைநீர் வடிகால் கட்டும் பணி (210 மீட்டர்)(120016R304) | ரூ.8,00,000/– | வேல்மணி கன்ஸ்டரக்சன் ஆண்டிபட்டி | (-)0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு. L.எல்லப்பன், ஒப்பந்தகாரர் , போடிநாயக்கனூர். | 5.54% மதிப்பீட்டை விட கூடுதல் |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட**–0.01%** குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள வேல்மணி கன்ஸ்டரக்சன், ஆண்டிபட்டி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் ,அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1760/2022/இ1)

**தீர்மான எண் :102–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–16:</u>**

தேசிய வாழ்வாதார திட்டத்தின் கீழ் போடிநாயக்கனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் தகுதியான சாலையோர வியாபாரிகள் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20789 / 2021 UPA நாள். 16.06.22 ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன் படி மேற்காணும் பணிக்கு **04.07.2022**ம் ஒப்பந்தப்புள்ளி முதல் முறையாக கோரியதில் 3 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. M/S.GoodHopeFoundation, Thirumangalam
2. M/S.Sense Image Technologies Pvt Ltd, Chennai-600119
3. M/S Read Trust,Madurai

வரப்பெற்ற **3** ஒப்பந்த நிறுவனத்தின் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளியை, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதியான ஒரு ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி விலைபட்டியலை **13.07.2022**ம் தேதி திறக்கப்பட்டு தயார் செய்யப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் செய்யப்பட வேண்டிய பணிகள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை |
|---|---|---|---|
| **1** | போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து சாலையோர வியாபாரிகளை பயோமெட்ரிக் முறையில் கணக் கெடுப்பு எடுத்தல் மற்றும் அவர்களுக்கு QR code உடனான அடையாள அட்டை ( ID card) தயாரித்து வழங்குதல், விற்பனை சான்றிதழ், (Certificate of vendors) நகர தெரு விற்பனை திட்டம் (CSVP) விரிவான செயல் படுத்துதல் திட்டம் (DIP) மற்றும் MIS தரவுகளை 5 ஆண்டுகளுக்கு பராமரித்தல் | Dr,S,அருள் ஞானசேகர், (GoodHopeFoundation) த/பெ.சஞ்சீவி, 50, 8வது தெரு, ஜவஹர் தெரு, திருமங்கலம், மதுரை மாவட்டம் | **600/–** 1 நபருக்கு |

**அலுவலகக்குறிப்பு :** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள GoodHopeFoundation, திருமங்கலம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியமைக்கும் ,அதற்கான செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண் : 7210 / 2022 / எப்1**
**தீர்மான எண் :103–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்–17:</u>**

மனுதாரர் திரு.S.சுகுமார் & S.உமாதேவி என்பவர் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட, சர்வே வார்டு –2 ; பிளாக் எண்–4; நகரளவு எண்–181/1,181/2A-ல் கட்டுப்பட்டுள்ள 3.01 ஏக்கர் பரப்பளவுள்ள மனையிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க உத்தேசித்துள்ளதாகவும், மேற்படி நிலமானது அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் விவசாயப் பயன்பாட்டிற்கான நில உபயோகத்தில் அமைந்துள்ளதால், அதனை குடியிருப்பு பயன்பாட்டிற்கான நில உபயோகமாக மாற்றம் செய்ய கோரி 26.07.2022 ஆம் தேதிய விண்ணப்பம் வரப்பெற்றதை பொதுமக்களிடமிருந்து நிலஉபயோகம் மாற்றம் செய்வது

தொடர்பாக ஆலோசணைகள் மற்றும் ஆட்சேபணைகள் பெரும் பொருட்டு செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் தேனி அவர்களின் வழி தமிழ் நாளிதழிலும் மற்றும் ஆங்கில நாளிதழிலும் விளம்பரம் செய்வதற்கும், **30** தினங்களில் பொது மக்கள் தங்களது ஆலோசனைகள், ஆட்சேபனைகளை தெரிவிக்கும் பொருட்டும்,விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மனுதாரின் **3.01** ஏக்கர் அளவுள்ள இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத் திட்டத்தில் விவசாய நில உபயோகத்தில் அமைந்துள்ளது.. மேற்படி இடத்தில் எவ்வித விவசாயமும் செய்யப்படாமல் தரிசாக உள்ளது. எனவே, விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு பயன்பாட்டிற்கான நில உபயோகமாக மாற்றம் செய்ய பொது மக்கள் தங்களது ஆலோசனைகள், ஆட்சேபனைகளைத் தெரிவிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்.1925/2022/எப்1)

**தீர்மான எண் :104–** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) திருமதி.ச.ராஜராஜேஸ்வரி
நகர்மன்ற தலைவர்

// உண்மைநகல் //

ஆணையாளார்(கூ.பொ)
போடிநாயக்கனூர் நகராட்சி